குறைதீர் கூட்டத்தில் 20 பயனாளிகளுக்கு ரூ.40.29 லட்சம் நலத்திட்ட உதவி

மக்கள் குறைதீர் கூட்டத்தில் பயனாளி ஒருவருக்கு நலத்திட்ட உதவியை வழங்குகிறார் ஆட்சியர் இரா.சுகுமார்.

திருநெல்வேலி, பிப். 9: திருநெல்வேலி மாவட்ட மக்கள் குறைதீர் கூட்டத்தில் 20 பயனாளிகளுக்கு ரூ.40 லட்சத்து 29 ஆயிரத்து 320 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் வழங்கினார்.

திருநெல்வேலி மாவட்ட மக்கள் குறைதீர் கூட்டம் ஆட்சியர் இரா. சுகுமார் தலைமையில் திங்கள்கிழமை நடைபெற்றது. இக் கூட்டத்தில், பொதுமக்களிடம் இருந்து மனுக்களை பெற்றுக் கொண்ட ஆட்சியர், அந்த மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். மேலும், முதல்வரின் தனிப்பிரிவு மனுக்கள் மீது தனிக்கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, தொழிலாளர் நலத்துறை சார்பில் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள கட்டுமான தொழிலாளர்கள் 13 பேருக்கு வீட்டுவசதி திட்டத்தில் தலா ரூ.2,96,190 மதிப்பிலான வீடுகள், மாற்றுத் திறனாளிகள் நலத்துறை சார்பில் ஒரு பயனாளிக்கு ரூ.1.05 லட்சம் மதிப்பில் பேட்டரியால் இயங்கும் சக்கர நாற்காலி, ஒரு பயனாளிக்கு ரூ.6,350 மதிப்பிலான தையல் இயந்திரம், 5 பயனாளிகளுக்கு தலா ரூ.13,500 மதிப்பிலான அறிதிறன் கைப்பேசி என மொத்தம் 20 பயனாளிகளுக்கு ரூ.40 லட்சத்து 29 ஆயிரத்து 320 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் வழங்கினார்.

இக் கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மு. துரை, தொழிலாளர் நலத்துறை இணை ஆணையர் சுமதி, தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) மணிகண்டன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அனிதா, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) ஜெயா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

உறுதிமொழியேற்பு...

திருநெல்வேலி மாநகராட்சியில் ஆணையர் மோனிகா ராணா, துணை மேயர் கே.ஆர்.ராஜு ஆகியோர் தலைமையில் கொத்தடிமை முறை ஒழிப்பு விழிப்புணர்வு உறுதிமொழியை திங்கள்கிழமை ஏற்ற மாநகராட்சி பணியாளர்கள். (வலது) திருநெல்வேலி மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாநகர காவல் துணை ஆணையர்கள்(கிழக்கு) வி.வினோத் சாந்தாராம், (மேற்கு) சி. மதன் ஆகியோர் தலைமையில் கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு உறுதிமொழி ஏற்றோர்.

நெல்லை மேற்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டம்

திருநெல்வேலி, பிப். 9: திருநெல்வேலி மேற்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் மேலப்பாளையத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது.

மேலப்பாளையம் ரிலையன்ஸ் சந்திப்பு அருகேயுள்ள கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்துக்கு, மாவட்டச் செயலர் இரா. ஆவுடையப்பன் தலைமை வகித்தார். திமுக துணைப் பொதுச் செயலரும், தேர்தல் அறிக்கை குழு தலைவருமான கனிமொழி எம்.பி. சிறப்புரையாற்றினார். தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆ. பிரபாகரன், அம்பாசமுத்திரம் நகர்மன்றத் தலைவர் கே.கே.சி. பிரபாகரன், தொகுதி பார்வையாளர்கள் அம்பாசமுத்திரம் ஜோசப் ராஜ், ஆலங்குளம் கணேஷ்குமார் ஆதித்தன், மாவட்ட துணைச் செயலர் ப. தமயந்தி, தமிழ்ச்செல்வன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் பேசுகிறார் திமுக துணைப் பொதுச்செயலர் கனிமொழி எம்.பி.

தீர்மானங்கள்: திமுக தலைவரும், தமிழக முதல்வருமான மு.க. ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி மார்ச் 1 ஆம் தேதி அனைத்துப் பகுதிகளிலும் கட்சிக் கொடியேற்றி இனிப்பு மற்றும் நலத்திட்ட உதவிகளை பொதுமக்களுக்கு வழங்குவது. 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக கூட்டணி வென்று திராவிட மாடல் ஆட்சி 2.0 தொடர ஸ்டாலின் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும் முழக்கத்தோடு தீவிரமாகப் பணியாற்றுவது.

தமிழ்நாடு தலை குனியாது என்ற தலைப்பில் ஆலங்குளம் தொகுதியில் இம் மாதம் 11 ஆம் தேதியும், அம்பாசமுத்திரம் தொகுதியில் 15 ஆம் தேதியும் கூட்டங்கள் நடத்துவது. இம் மாதம் 11 ஆம் தேதி வெல்லும் தமிழ் பெண்கள் என்ற தலைப்பில் பிரசார கூட்டங்கள் நடத்துவது.

மத்திய அரசைக் கண்டித்து திருநெல்வேலி மாவட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் இம் மாதம் 12 ஆம் தேதி நடைபெற உள்ள ஆர்ப்பாட்டத்தில் நிர்வாகிகள், தொண்டர்கள் திரளாக பங்கேற்பது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

நெல்லையில் டாஸ்மாக் ஊழியர்கள் பணி புறக்கணிப்பு போராட்டம்

திருநெல்வேலி, பிப். 9: திருநெல்வேலியில் டாஸ்மாக் ஊழியர்கள் சுமார் 3 மணி நேரம் மதுக்கடைகளைத் திறக்காமல் பணிப் புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

டாஸ்மாக்கில் உள்ள பணிச்சுமையை குறைக்க காலிப்பணியிடங்களை உடனடியாக நிரப்பவேண்டும் , காலி மது பாட்டில்களை திரும்பப் பெற தனியாக பணியாளர்களை நியமிக்க வேண்டும், பணி முடிந்து செல்லும் ஊழியர்களுக்கு விபத்து ஏற்பட்டால் மருத்துவ செலவை அரசு ஏற்க வேண்டும், இறந்த பணியாளர்களின் வாரிசுக்கு பணி வழங்குவதோடு, குடும்பத்திற்கு ரூ.10 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தப் போராட்டம் நடைபெற்றது.

திருநெல்வேலியில் நடைபெற்ற போராட்டத்தால் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பகல் 12 மணிக்கு மதுக்கடைகள் திறக்கப்படவில்லை. இதனால் 12 மணியளவில் கடை முன்பாக கூடியவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர். சுமார் 3 மணி நேர போராட்டத்துக்கு பிறகு பிற்பகல் 3 மணிக்கு மேல் மீண்டும் கடைகள் திறக்கப்பட்டு வழக்கம் போல் விற்பனை நடைபெற்றது.

பிளஸ்–2 செய்முறைத் தேர்வு தொடக்கம்

மீனாட்சிபுரம் மாநகராட்சி மகளிர் மேல்நிலைப் பள்ளியில் திங்கள்கிழமை நடைபெற்ற பிளஸ்–2 மாணவர்களுக்கான செய்முறைத் தேர்வில் பங்கேற்ற மாணவிகள்.

மேலப்பாட்டத்தில் திருக்குறள் பயிலரங்கு

திருக்குறள் பயிலரங்கில் பங்கேற்றோர்.

திருநெல்வேலி, பிப். 9: தமிழ் வளர்ச்சித் துறையின் திருக்குறள் திருப்பணிகள் திட்டத்தின் கீழ் திருக்குறள் பயிலரங்கு மேலப்பாட்டம் ஹரிஹர் நடுநிலைப் பள்ளியில் நடைபெற்றது.

பயிலரங்கக் குழுத் தலைவர் கவிஞர் பாப்பாக்குடி இரா.செல்வமணி தலைமை வகித்தார். பள்ளி நிர்வாகி ரவிச்சந்திரன் முன்னிலை வகித்தார். ஆசிரியை ஸ்வீட்லின் விஜிலா ஜெப ரீட்டா வரவேற்றார். பாளை. புறநகர் வட்டாரக் கல்வி அலுவலர் தா.ஜெபரத்தினம் சுகந்தி தொடக்க உரையாற்றினார். தலைமை ஆசிரியர் அப்பாத்துரை வாழ்த்திப் பேசினார். 'பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர்' என்ற தலைப்பில் கவிஞர் ஜெயபாலனும், 'அறம்பொருத பொன்போலத் தேயும்' எனும் தலைப்பில் பேராசிரியர் ஹரிஹரனும் பயிலரங்க உரையாற்றினர். அவர்களுக்கு பரிசுகள் வழங்கிப் பாராட்டப்பட்டது. ஆசிரியை பேச்சியம்மாள், கவிஞர் முத்துசாமி, கவிஞர்கள் புன்னைச்செழியன், சுப்பையா, எழுத்தாளர் தளவாய் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

நெல்லை மாநகரில் கஞ்சா வழக்குகளில் 45 பேர் கைது

திருநெல்வேலி, பிப். 9: திருநெல்வேலி மாநகரில் கடந்த 40 நாள்களில் 45 பேர் கஞ்சா வழக்குகளில் கைது செய்யப்பட்டதுடன் அவர்களிடமிருந்து சுமார் 18 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்து மாநகர போலீஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

திருநெல்வேலி மாநகர காவல் ஆணையராக நெ.மணிவண்ணன் பதவியேற்ற போது, மாநகரில் கஞ்சா விற்பனை செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுத்திருந்தார். அதன்படி, கடந்த 40 நாள்களில் மட்டும் திருநெல்வேலி மாநகரத்தில் கஞ்சா விற்பனை குற்றம் சம்பந்தமாக 26 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 45 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 18.335 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டு அவர்களில் 4 பேர் குண்டர் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், மாநகரில் சட்டவிரோதமாக மது விற்றதாக 50 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 52 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மொத்தம் 1,521 மது பாட்டில்கள்(262 லிட்டர்) பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. அதே போல பொது இடத்தில் மது அருந்தி பொதுமக்களுக்கு இடையூறு செய்ததாக 87 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. கஞ்சா போன்ற போதைப் பொருள்கள் விற்பனை செய்பவர்கள், பொதுமக்களுக்கு இடையூறு செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை தொடரும் என மாநகர காவல் ஆணையர் நெ.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

சீவலப்பேரி அருகே பெட்ரோல் குண்டு வீசியவர் கைது

திருநெல்வேலி, பிப். 9: சீவலப்பேரி அருகே மாமியார் வீட்டின் முன்பு பெட்ரோல் குண்டு வீசிய மருமகனை போலீஸார் கைது செய்தனர்.

தாழையூத்து அருகே உள்ள ராஜவல்லிபுரத்தை சேர்ந்த சுடலை மகன் ஊமைத்துரை (38). தொழிலாளி. இவருக்கும் இவரது மனைவிக்கும் இடையே சில மாதங்களாக குடும்ப பிரச்னை இருந்து வந்ததாம். இந்நிலையில் சில நாள்களுக்கு முன்பு ஊமைத்துரையின் மனைவி கருத்து வேறுபாடு காரணமாக, மேல பாலாமடையில் உள்ள தாய் வீட்டுக்குச் சென்றாராம். இதையடுத்து சம்பவத்தன்று ஊமைத்துரை தனது மனைவியை அழைத்துவர மாமியார் வீட்டுக்குச் சென்றுள்ளார். ஆனால் அவரது மனைவி வர மறுத்ததால் ஆத்திரம் அடைந்த அவர் மது பாட்டிலில் பெட்ரோலை நிரப்பி தீ வைத்து, தனது மாமியார் வீட்டின் முன்பு வீசியுள்ளார். இதுகுறித்த புகாரின்பேரில், சீவலப்பேரி போலீஸார் வழக்குப் பதிவு செய்து ஊமைத்துரையை கைது செய்தனர்.

பாளை.யில் சிறைக் கைதி உயிரிழப்பு

திருநெல்வேலி, பிப். 9: பாளையங்கோட்டை மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த தண்டனை கைதி உடல் நலக் குறைவால் ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தார்.

சுத்தமல்லி பகுதியைச் சேர்ந்தவர் சுப்பிரமணியன் (78). இவர், கடந்த 2005 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாவட்ட பொருளாதார குற்றப்பிரிவு போலீஸாரால் பணம் கையாடல் வழக்கில் கைது செய்யப்பட்டார். இவ் வழக்கில் தண்டனை பெற்ற அவர், பாளையங்கோட்டை மத்திய சிறையில் தண்டனை கைதியாக அடைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் கடந்த 2025 நவம்பர் மாதம் சுப்பிரமணியனுக்கு திடீர் உடல்நலக் குறைவு ஏற்பட்டதாம். அவரை திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிறைத்துறையினர் சேர்த்தனர். அங்கு அவர் ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தார். இது குறித்து பெருமாள்புரம் போலீஸார் விசாரித்து வருகிறார்கள்.

இன்றைய நிகழ்ச்சிகள்

திருநெல்வேலி

மாநகராட்சி நிர்வாகம்: பொதுமக்கள் குறைதீர் முகாம், மாநகராட்சி அலுவலகம், திருநெல்வேலி நகரம் , காலை 10.30.

தமிழ் வளர்ச்சித் துறை: 'வள்ளுவம் ஒரு வாழ்வியல் நெறி' என்ற தலைப்பில் நாட்டிய நாடகம், அரசு பொறியியல் கல்லூரி, திருநெல்வேலி, காலை 10.15.

இந்து சமய அறநிலையத் துறை: 70 வயது பூர்த்தியடைந்த 150 தம்பதிகளுக்கு சிறப்பு செய்தல், ஆறுமுக நயினார் சந்நிதி, நெல்லையப்பர் திருக்கோயில், திருநெல்வேலி நகரம், காலை 10.30.

திமுகவினர் குடும்ப உணர்வுடன் தேர்தல் பணியாற்ற வேண்டும்

கனிமொழி

திருநெல்வேலி, பிப். 9: திமுகவினர் குடும்ப உணர்வுடன் தேர்தல் பணியாற்ற வேண்டும் என்றார் திமுக துணைப் பொதுச் செயலரும், தேர்தல் அறிக்கை குழு தலைவருமான கனிமொழி எம்.பி.

திருநெல்வேலியில் திமுக மேற்கு மாவட்ட நிர்வாகிகளுடன் திங்கள்கிழமை நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் அவர் பேசியது:

2026 சட்டப்பேரவைத் தேர்தலில் நாம் செய்ய வேண்டிய பணிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் பட்டியலிட்டு கொடுத்துள்ளார். திமுக அரசின் சாதனைகளை மக்களிடம் கொண்டு சேர்க்க, ஸ்டாலினின் மகளிர் படையான வெல்லும் தமிழ் பெண்கள் குழுவினர் ஒவ்வொரு வாக்குச் சாவடி வாரியாக செயல்பட வேண்டும். ஒரு பூத்துக்கு 10 பேர் கொண்ட குழுவாகச் சென்று ஒவ்வொரு வீட்டிலும் அரசின் திட்டங்களை எடுத்துச் சொல்ல வேண்டும். வீட்டு உரிமையாளரின் அனுமதியுடன் நமது சாதனைகளை சுவரொட்டியாக ஒட்ட வேண்டும்.

அதை புகைப்படமாக எடுத்து, இதற்காக உருவாக்கப்பட்டுள்ள பிரத்யேக கட்செவி அஞ்சல் குழுவில் பகிர வேண்டும். பாஜக தலைமையிலான மத்திய அரசு தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையில் தமிழகத்திற்கு எதுவும் வழங்கப்படவில்லை. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை முடக்கும் வகையில் மக்களவையில் மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது.

முன்பு மாநில அரசு தீர்மானித்த வேலை நாள்களையும், பயனாளிகளையும், இனி தில்லியில் இருந்து முடிவு செய்யும் நிலை உருவாகியுள்ளது. இதனால் கிராமப்புறங்களில் உள்ள 80 சதவிகித பெண்கள் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. ஏற்கெனவே 100 நாள்களாக இருந்த வேலைவாய்ப்பு, இந்த மசோதாவால் 50 நாள்களாவது வேலை கிடைக்குமா என்ற அச்சத்தை உருவாக்கியுள்ளது.

மத்திய அரசு, அமெரிக்காவுடன் அண்மையில் செய்துள்ள ஒப்பந்தத்தின் மூலம், அங்கிருந்து விவசாயப் பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டு, உள்ளூர் சந்தையில் விற்கப்படுவதால், நம் நாட்டு விவசாயிகளின் வாழ்வாதாரம் கேள்விக் குறியாகி உள்ளது. மாநில நிதிகள், ரயில்வே திட்டங்கள் மற்றும் பேரிடர் நிவாரண நிதிகளை வழங்காத மத்திய பாஜக அரசுடன், அதிமுக உள்ளிட்ட சில கட்சிகள் கூட்டணி வைத்துள்ளன. தமிழகத்துக்கு துரோகம் செய்யும் இந்தக் கூட்டணியை மக்கள் மன்றத்தில் தோலுரித்துக் காட்ட வேண்டும்.

'ஊர் கூடித் தேர் இழுத்தால் தான் தேர் வரும்' என்ற பழமொழிக்கு ஏற்ப திமுகவினர் அனைவரும் குடும்ப உணர்வுடன் ஒற்றுமையாகச் செயல்பட்டு தேர்தல் பணியாற்ற வேண்டும். முதல்வர் மு.க. ஸ்டாலினின் மகளிர் உரிமைத் தொகை, காலை உணவுத் திட்டம் உள்ளிட்ட சாதனைகளை மக்களிடம் கொண்டு சேர்த்தால் வெற்றி நிச்சயம் என்றார் அவர்.

SOUTH INDIAN Bank
EXPERIENCE NEXT-GEN BANKING

தி சௌத் இந்தியன் வங்கி லிட., மதுரை பிராந்திய அலுவலகம்:
முதல் மாடி, YMCA பில்டிங், அஸ்டோரியா ஹோட்டல் எதிரில், 70 அடி ரோடு, எல்லீஸ் நகர், மதுரை - 625 016. Ph: 0452 2300205.
Email: ro1015@sib.co.in CIN : L65191KL1929PLC001017.

சொத்து சுவாதீன அறிவிப்பு

[பார்க்க விதி 8(1)] (அசையா சொத்திற்காக)

தி சௌத் இந்தியன் பேங்க் லிட்-ன் அதிகாரம் பெற்ற மற்றும் கீழே கையொப்பமிட்டுள்ள அலுவலர் நிதிச்சொத்துக்களின் பிணையம் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணையநல அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(12)-ன்கீழ், பிணையநல (அமலாக்க) விதிகள் 2002, விதி 3-ன்படி வழங்கப்பட்ட அதிகாரங்களை பயன்படுத்தி மேற்படி சட்டப்பிரிவு 13(2)-ன்கீழ் 22.01.2025 தேதியில் வழங்கப்பட்ட கேட்பு அறிவிப்பில், கடன்தாரர் 1) திரு.S.மரியதாஸ் நவின்ராஜ், S/o.சொர்ணமாணிக்கம், [உரிமையாளர்; M/s. அல்போன்சா ஆல் கிளாஸ் வொர்க்ஸ்], எண்.174/F-3, S.N.ஹைரோடு, திருநெல்வேலி ஜங்ஷன், திருநெல்வேலி, தமிழ்நாடு-627001. மேலும் இருப்பிடம் கதவு எண்.4, இருதய நகர், வடக்கு பைபாஸ் ரோடு, உடையார்பட்டி, திருநெல்வேலி, தமிழ்நாடு-627001. மேலும் இருப்பிடம் கதவு எண்.9, நடுத்தெரு, சிந்துபூந்துறை, திருநெல்வேலி ஜங்ஷன், தமிழ்நாடு-627001. & உத்திரவாதி 2) திருமதி.ஹெலன் மேரி, W/o.S.திரு.மரியதாஸ் நவின்ராஜ், கதவு எண்.4, இருதய நகர், வடக்கு பைபாஸ் ரோடு, உடையார்பட்டி, திருநெல்வேலி ஜங்ஷன், தமிழ்நாடு-627001. மேலும் இருப்பிடம் கதவு எண்.9, நடுத்தெரு, சிந்துபூந்துறை, திருநெல்வேலி ஜங்ஷன், தமிழ்நாடு-627001 ஆகியோர் வங்கிக்கு திருப்பிச் செலுத்த வேண்டிய தொகை 21.01.2025 தேதிப்படி ரூ.5,13,754.16/- (ரூபாய் ஐந்து லட்சத்து பதிமூன்றாயிரத்து எழுநூற்றி ஐம்பத்து நான்கு பைசா பதினாறு மட்டும்) பின்வட்டி மற்றும் அதற்கான செலவுகளுடன் அறிவிப்பு பெற்ற 60 நாட்களுக்குள் செலுத்துமாறு கோரப்பட்டது.

கடன்தாரர் & உத்திரவாதி மேற்படி கடன்தொகையை திருப்பிச் செலுத்தத் தவறிவிட்டதால், கீழே கையொப்பமிட்டவர் மேற்படி சட்டப்பிரிவு 13(4)-ன் கீழ் வரும் விதி 8-ல் கூறப்பட்டுள்ளவாறு அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி 2026, பிப்ரவரி 7-ம் தேதி இதன் கீழ் விவரிக்கப்பட்டுள்ள சொத்தை அடையான சுவாதீனம் செய்து கொண்டுள்ளார் என்று கடன்தாரர் & உத்திரவாதி மற்றும் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

எனவே, குறிப்பாக கடன்தாரர் & உத்திரவாதி மற்றும் பொதுமக்கள் இச்சொத்தை கையாள வேண்டாம் என்று எச்சரிக்கப்படுகிறார்கள். மேலும், சொத்து தொடர்பான எந்தவொரு பரிவர்த்தனையும் தி சௌத் இந்தியன் பேங்க் லிமிடெட்டுக்கு செலுத்த வேண்டிய தொகை 06.02.2026 தேதிப்படி ரூ.6,18,742.61/- (ரூபாய் ஆறு லட்சத்து பதினெட்டாயிரத்து எழுநூற்றி நாற்பத்திரண்டு மற்றும் பைசா அறுபத்தொன்று மட்டும்) பின்வட்டி மற்றும் அதற்கான கட்டணங்கள் & செலவுகளுக்குட்பட்டது.

பிணையச் சொத்துக்களை மீட்பதற்கு கிடைக்கக்கூடிய கால அவகாசத்தை பொருத்தவரையில், சட்டப்பிரிவு 13-ன் உட்பிரிவு (8)-ன் விதிகளுக்கு கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

அசையாச் சொத்துக்களின் விபரம்:

திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி தாலுகா, மணிமூர்த்தீஸ்வரம் கிராமம், Sy. No. 62/2B, 62/3B1,62/3B2, 62/3B3-ல் அமைந்துள்ள , "கிருதய நகர்" பிளாட் எண்.4-ல் உள்ள 2235 சதுரடி அல்லது 207.64 சதுர மீட்டர் அளவுள்ள கட்டடத்துடன் கூடிய இடம் மற்றும் அதன் அனைத்து பகுதிகளுடன், அதிலுள்ள பிற அனைத்து கட்டுமானங்கள், மேம்பாடுகள், தற்போதிருக்கும் பயன்பாட்டு உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்தும் சேர்த்து, திருமதி.ஹெலன் மேரி என்பவருக்கு சொந்தமான இந்த சொத்து, திருநெல்வேலி SRO Joint I-ல் பதிவுபெற்ற 01.12.2010 தேதியிட்ட விற்பனைப்பத்திர எண்.1557/2010-ல் மேலும் முழுவதுமாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்: வடக்கு: பிளாட் எண்.3-ல் உள்ள இடம், கிழக்கு: 25 அடி அகல தெற்கு வடக்கு பொது ரோடு, தெற்கு: பிளாட் எண்.5-ல் உள்ள இடம், மேற்கு: G.S.சுவாமி & கோ இடம்.

தேதி : 07.02.2026
இடம்: திருநெல்வேலி

அங்கீகாரம் பெற்ற அலுவலர்,
தி சௌத் இந்தியன் பேங்க் லிட்.

SOUTH INDIAN Bank
EXPERIENCE NEXT-GEN BANKING

தி சௌத் இந்தியன் வங்கி லிட., மதுரை பிராந்திய அலுவகம்:
முதல் மாடி, YMCA பில்டிங், அஸ்டோரியா ஹோட்டல் எதிரில், 70 அடி ரோடு, எல்லீஸ் நகர், மதுரை, தமிழ்நாடு. Pin-625016. ro1015@sib.co.in, Ph: 0452 2300205

இ - ஏல விற்பனை அறிவிப்பு

Ref: RO/MDU/RT/SAR/27/2025-26 தேதி: 06.02.2026

நிதிச்சொத்துக்களின் பிணையம் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணையநல அமலாக்கச் சட்டம் 2002-ன் கீழ், பிணைய நல (அமலாக்க) விதிகள் 2002-ல் கூறப்பட்டுள்ள விதி 8(6) மற்றும் 9(1)-ன்படி அசையா சொத்துக்களுக்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு.

1) திரு.T.சிவானந்த பாண்டியன், S/o.லேட்.திரு. தியாகராஜன் பாண்டியன், 1/44/1-54, நடுத்தெரு, முத்துமோதன்மொழி, ராதாபுரம், திருநெல்வேலி-627651.
2) திரு.T.தசரத ராஜா, S/o. லேட் திரு. தியாகராஜன் பாண்டியன், 1/44/1-54, நடுத்தெரு, முத்துமோதன்மொழி, ராதாபுரம், திருநெல்வேலி-627651.
3) திரு.சண்முகசுந்தர பாண்டியன், S/o. லேட்.திரு. தியாகராஜன் பாண்டியன், 1/44/1-54, நடுத்தெரு, முத்துமோதன்மொழி, ராதாபுரம், திருநெல்வேலி-627651.
4) திருமதி. அனந்தநாயகி ரவீந்திரன், W/o. திரு. ரவீந்திரன், 91, ராஜலெட்சுமி தெரு, செட்டியபத்து, தூத்துக்குடி-628203.
5) திருமதி.R.விந்தியா நளலெட்சுமி, W/o.திரு.T.சிவானந்த பாண்டியன், 1/44/1-54, நடுத்தெரு, முத்துமோதன்மொழி, ராதாபுரம், திருநெல்வேலி-627651.
6) திரு.ரவீந்திரன், 91, ராஜலெட்சுமி தெரு, செட்டியபத்து, தூத்துக்குடி-628203.
7) திரு.R.அருண்குமார், S/o. திரு. ரவீந்திரன், வசிப்பிடம்: 91, ராஜலெட்சுமி தெரு, செட்டியபத்து, தூத்துக்குடி- 628203.
8) திருமதி.R.சாங்தா ராஜலெட்சுமி, D/o. திரு. ரவீந்திரன், வசிப்பிடம்: 91, ராஜலெட்சுமி தெரு, செட்டியபத்து, தூத்துக்குடி-628203.
9) திருமதி.R.மதிவதனி ரேகா, D/o. திரு. ரவீந்திரன், 91, ராஜலெட்சுமி தெரு, செட்டியபத்து, தூத்துக்குடி-628203.
10) செல்வி.R.தீபிகா, D/o.திரு.ரவீந்திரன், 91, ராஜலெட்சுமி தெரு, செட்டியபத்து, தூத்துக்குடி-628203.

தி சௌத் இந்தியன் வங்கி கிளையில் (Secured Creditor) அடமானம் வைக்கப்பட்டு, தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட்டின் (Secured Creditor) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கொள்நிலை சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை மேலே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் உத்திரவாதி(கள்) ஆகியோர் 05.02.2026 தேதிப்படி தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட்., நாகர்கோயில் கிளைக்கு (Secured Creditor) செலுத்த வேண்டிய தொகை ரூ.3,97,88,879.65-ஐ (ரூபாய் மூன்று கோடியே தொன்னூற்றி ஏழு லட்சத்து எண்பத்தெட்டாயிரத்து எண்ணூற்றி எழுபத்தொன்பது மற்றும் பைசா அறுபத்தைந்து மட்டும்) பின்வட்டி மற்றும் செலவினங்களுடன் வசூலிக்கும் பொருட்டு "அது இருக்கும் இடத்திலேயே", "என்ன உள்ளதோ அப்படியே", "அது எந்த நிலையிலிருப்பினும்" என்ற அடிப்படையில் 27.02.2026 அன்று ஏல விற்பனை செய்யப்படும் என்று பொதுமக்களுக்கு குறிப்பாக கடன்தாரர் / உத்திரவாதிகள் / லேட். திருமதி.அனந்தநாயகி ரவீந்திரனுடைய சட்ட வாரிசுகள் ஆகியோர்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

*Dues as per our claim in the Original application filed before DRT, Madurai.

சொத்தின் உரிமையாளர் பெயர்: திருமதி. அனந்தநாயகி ரவீந்திரன்

சொத்து விபரம்:- தூத்துக்குடி பதிவு மாவட்டம், உடன்குடி சார்பதிவகம், திருச்செந்தூர் தாலுகா, செட்டியபத்து கிராமத்தின் சர்வே எண்.29/3B (முன்னதாக 29/3)-க்குட்பட்ட 40.00 சென்ட் அளவுள்ள இடம் மற்றும் அதன் அனைத்து பகுதிகளுடன், செட்டியப்பத்து பஞ்சாயத்தில் தோராயமாக 1078.54.சதுரடி கட்டுமானப்பரப்பில் எண்.2/91-ஐ கொண்ட குடியிருப்புக் கட்டடத்துடன் அதிலுள்ள மற்ற அனைத்து உரிமைகள் மற்றும் மேம்பாடுகள் ஆகியவற்றுடன் சேர்த்து திருமதி. அனந்தநாயகி ரவீந்திரன் என்ற பெயரில் உடன்குடி SRO-ல் 31.10.2008 அன்று பதிவுபெற்ற விற்பனைப்பத்திர எண்.2415/2008-ல் மேலும் முழுவதுமாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள் கிழக்கு: ராமசேகரனுடைய சொத்து, மேற்கு: லட்சுமணனுடைய சொத்து, வடக்கு: அருள்மிகு சிதம்பர ஈஸ்வரர் கோயில் சொத்து மற்றும் நங்கைநாதனுடைய சொத்து மற்றும் ரோடு/நடைபாதை, தெற்கு: செல்வராஜின் சொத்து.

நிர்ணயிக்கப்பட்ட தொகை	ரூ.29,02,200/- (ரூபாய் இருபத்தொன்பது லட்சத்து இரண்டாயிரத்து இருநூறு மட்டும்).
முன் வைப்புத் தொகை (EMD)	ரூ.2,90,220/- (ரூபாய் இரண்டு லட்சத்து தொன்னூறாயிரத்து இருநூற்றி இருபது மட்டும்). EMD, தி சௌத் இந்தியன் வங்கி, நாகர்கோயில் கிளை, தரைத்தளம், 6/1-50C, கேப் ரோடு, வீப்சமூடு சந்திப்பு, சுந்தர் ரேடியோஸ் அருகில், நாகர்கோயில், கன்னியாகுமரி மாவட்டம்-629001. என்ற விலாசத்தில் 26.02.2026 அன்று மாலை 5.30 மணி அல்லது அதற்கு முன்பாகவோ செலுத்தப்பட வேண்டும்.
ஏல அதிகரிப்புத் தொகை	ரூ.10,000/-
இ-ஏல நேரம் மற்றும் தேதி	27.02.2026 அன்று 12.30 PM முதல் 01.30 PM வரை (விற்பனை முடியும் வரை 5 நிமிட வரம்பற்ற தன்நீட்சியுடன்)
வங்கிக்கு தெரிந்த வில்லங்கங்கள்	01.01.2014 முதல் 03.02.2026 வரை வில்லங்கங்கள் ஏதுமில்லை.

விற்பனை பற்றிய விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, தி சௌத் இந்தியன் வங்கி லிட்.(Secured Creditor)-ன் இணையதளம் அதாவது www.southindianbank.com-ல் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பை பார்க்கவும். https://bankauctions.in என்ற இணையதளத்திலும் விபரங்களை அறியலாம்.

சொத்து ஆய்வு, இ-ஏல நிபந்தன